05.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.22

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயகுமார் | | |
| த/பெ | பாலன் | | |
| கிராமம் | கீழ்ப்பெரும்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 50/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது இருப்பு பாதை காவல் நிலையத்திற்கு எதிரில் உள்ள ஆட்டோ நிறுத்தத்தில் என் ஆட்டோ எண். TN32F1768 ஆட்டோவை ஓட்டி ஜீவனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளில் ஒருவர் ஆய்வாளர் மற்றொருவர் ஜீப் ஓட்டுனர். மற்ற இருவரும் காவல் நிலையத்தில் காவலராக பணி புரிந்து வந்தார்கள். எனக்கு சாட்சி சுரேஷ்குமார் என்பவரை எனக்கு தெரியும். நான் ஆட்டோ ஓட்டும்போது இந்து வழக்கு சம்மந்தமாக அருகில் உள்ள காவல் நிலையத்தில் சத்தம் எதாவது கேட்டதா என்றால் கேட்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். என்னை விழுப்புரம் சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தார்கள். வேறு யாரும் விசாரணை செய்யவில்லை. என்னை விசாரிக்கும் போது வேறு யாரையும் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

கடந்த 06.05.2014ம் தேதி சவாரி சென்று விட்டு இரவு 2 மணிக்கு ஆட்டோ நிறுத்தத்திற்கு நான் வந்தேன் என்றும், அப்போது இருப்பு பாதை காவல் நிலையத்திற்குள்

யாரையோ அடிப்பது போல சத்தம் கேட்டது என்றும் ஒரு ஆண் நபர் அடிதாங்க முடியாமல் ஐயோ அம்மா என்று அலறும் சத்தம் கேட்டது என்றும், நானும் மற்ற ஆட்டோ ஓட்டுனர்களும் சென்று ஜன்னல் வழியாக பார்த்தோம் என்றும், உடனே ஜன்னல் கதவுகளை மூடிவிட்டார்கள் என்றும், இரவு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும், சொன்னேன் என்றால் சரியல்ல.

மறுநாள் 07.05.2014ந் தேதி காலை 6.45 மணியளவில் வந்தேன் என்றும், அப்போதும் தொடர்ந்துஅந்த அலறல் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது என்றும், கேட்கவே பாவமாக இருந்தது என்றும் காலை சுமார் 10 மணியளவில் இரயிலில் புத்தகம் விற்கும் ஜெயவேல் என்பவரை சட்டைஇல்லாமல் ஆய்வாளர், டிரைவர் திருக்குமரன் மற்றும் இரண்டு போலீஸ் கைதாங்கலாக தூக்கி கொண்டு வந்து காவல் நிலையத்தின் முன்புறத்தில் நின்ற ஒரு டாடா சுமோ வாகனத்தின் பின்பக்க சீட்டில் ஏற்றினார்கள் என்றும், சுமோ கார் வேகமாக புறப்பட்டது என்றும், அப்போது ஜெயவேல் லுங்கி மட்டும் கட்டியிருந்தார் என்றும் சட்டை இல்லை என்றும், தலை தொங்கிய நிலையில் இருந்தது என்றும் இதை நானும், டிரைவர்கள் மணிகண்டன், சுரேஷ்குமார் மற்றும் சிலர் பார்த்தோம் என்றும், அந்த ஜெயவேலுவை கடந்த 4 வருடங்களாக நாங்கள் பார்த்திருக்கிறோம் என்றும் ஜெயவேலுவை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் இறந்து விட்டார் என்ற செய்தியும் அவரை இரவும் காலையிலும் தொடர்ந்து காவல் நிலையத்தார் தாக்கியதால் தான் அவர் இறந்திருக்ககூடும் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. பிறகு காவல் நிலையம் பரபரப்பாக காணப்பட்டது என்றும் பிறகு விழுப்புரம் மாஜிஸ்ட்ரேட், சிபிசிஐடி ஆய்வாளர் விழுப்புரம், பின்னிட்டு வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் ஆகியோர்கள் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், மேற்படி சங்கதிகளை வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை.**